செ.வெ. எண்: 519 நாள்: 05.09.2012

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (5.9.2012) தலைமைச் செயலகத்தில், 32 மாவட்டங்களிலுள்ள 64 வட்டங்களில் 1 கோடியே 76 லட்சம் ரூபாய் செலவில் முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான சிறப்பு இல்லங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்களை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக துவக்கி வைத்தார்கள்.

அனைத்து மாவட்டங்களிலும் ஒரு மாவட்டத்திற்கு இரண்டு வட்டங்கள் வீதம் 64 இடங்களில் முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான சிறப்பு இல்லங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள் ஏற்படுத்தப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் அறிவிக்கப்பட்டது. முதியோர்களின் நலனைக் காக்கும் வகையில் அவர்களுக்கு தங்குமிடம், உணவு, மருத்துவ வசதிகள் மற்றும் பொழுதுபோக்கு வசதிகளை வழங்குவது மட்டுமல்லாமல் அவர்களோடு அதே வளாகங்களில் தங்கும் ஆதரவற்ற குழந்தைகளுடன் ஒருவருக்கொருவர் அன்பு மற்றும் அரவணைப்பை பகிர்ந்து கொள்ள முடியும் என்பதே இத்திட்டத்தின் சிறந்த நோக்கமாகும். மூத்த குடிமக்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளின் மனரீதியான தேவைகளை உணர்ந்து செயல்படுத்தப்பட்டுள்ள இத்திட்டம் ஒரு தன்னிகரில்லாத் திட்டமாகும். இத்திட்டத்தின்படி வயது முதிர்ந்த மாற்றுத் திறனாளிகளும் இவ்வில்லங்களில் தங்க வைக்கப்படுவர்.

இத்திட்டத்தினை துவங்க ஒவ்வொரு வளாகத்திலுள்ள குழந்தைகள் இல்லத்திற்கு தலா 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபாயும், முதியோர் இல்லத்திற்கு தலா 1 லட்சத்து 25 ஆயிரம் ரூபாயும் என 2 லட்சத்து 75 ஆயிரம் வீதம், 64 வளாகங்களுக்கு 1 கோடியே 76 லட்சம் ரூபாய் அரசால் வழங்கப்பட்டுள்ளது. இத்தொகையின் மூலம் குழந்தைகள் மற்றும் முதியோர் இல்லத்திற்குத் தேவையான பாத்திரங்கள் தளவாடச் சாமான்கள், கணினிகள், தொலைக்காட்சி பெட்டிகள், புத்தகங்கள், உள்விளையாட்டு உபகரணங்கள் ஆகியவற்றை வாங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

இது தவிர ஆண்டொன்றுக்கு ஒரு வளாகத்திற்கு அரசு மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் பங்காக 75:25 என்ற விகிதத்தில் 18 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் அளித்திட அரசு ஒப்புதல் அளித்துள்ளது. ஒவ்வொரு ஒருங்கிணைந்த வளாகத்திலும் 25 ஆதரவற்ற குழந்தைகளும், 25 முதியோர்களும் தங்கி பயன்பெறுவர். ஒரு மாவட்டத்திற்கு 2 வீதம் 32 மாவட்டங்களில் முதற்கட்டமாக அமைக்கப்பட்டுள்ள 64 ஒருங்கிணைந்த வளாகங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர், சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை முதன்மைச் செயலாளர் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள்: 5.9.2012